# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)

## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 3807/F/2025

திரு.சு.அறிவழகன், -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-602 001. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.சு.அறிவழகன், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.ச.சுரேஷ், மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-II, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், எண்.43/397 A, II தளம், இந்திரா காந்தி சாலை, இராஜாஜிபுரம் பகுதி II, திருவள்ளூர் மாவட்டம்-602 001 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 09.06.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "திருத்தணி வட்டம் கேஜி கண்டிகை ஊராட்சியில் இருக்கும் ஆர் சி கிறிஸ்துவ நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தில் சென்ட் ஜார்ஜ் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் என்றும் வணிக வளாகத்திற்கு தாங்கள் அளித்த DTCP இணையதள அனுமதி ஆணையை அரசு விதியின்படி வழங்கப்பட்டுள்ளதா தகவல் வழங்கவும்" என்பன போன்ற தகவல்களை 18 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்-602 001 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல் வழங்கவில்லை என மனுதாரர் 14.07.2025 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என 11.08.2025 நாளிட்ட பிரிவு **18(1)**-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.1277/2025/ திருவள்ளூர்-2, நாள் 10.09.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் மேல்முறையீட்டு அலுவலரால் ந.க.எண்.1277/2025/ திருவள்ளூர்-2, நாள் 10.09.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்து ஏற்றுக்கொள்கிறது. இதுகுறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (12.05.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, இப்புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.**

- **மனுதாரரின் 09.06.2025 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.பெ.குணசீலன், மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 3807/F/2025</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்-602 001.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.பெ.குணசீலன்,**
**மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**திருவள்ளூர் மாவட்டம்.**

***(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)***

**<u>புகார்தாரர்</u>**

திரு.சு.அறிவழகன்,
செருக்கனூர் காலனி மற்றும் அஞ்சல்,
திருத்தணி வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்-631 205.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)

Copy to: File NS/PA-